**28.04.2025**

**O.S.No.142/2012**

**வா.சா.1 : வேணுகோபால்**

**<u>1,4,6 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> :-**

4) என் அப்பா பெயரில் உள்ள சொத்தை பாக பிரிவினை செய்துகொள்ளவில்லை. தாவா சொத்து வீடு மற்றும் காலி இடத்தை தவிர வேறு சொத்துகள் என் அப்பாவுக்கு இல்லை. என் பெயரிலும், என் அண்ணன் பெயரிலும் நாங்கள் தனி தனியாக சம்பாத்தி சொத்துகள் உள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணம் சுவாதீனம் பத்திரம் அல்ல. கிரைய பத்திரம். மேற்படி சுவாதீன குதவை பத்திரத்திற்கோ நாங்களோ என் அண்ணனோ சுவாதீனம் கொடுக்கவில்லை.

5) பணத்தை பெற்றுக்கொண்டதற்கான குறிப்பு மேற்படி பத்திரத்தில் நான் கொடுத்ததாக உள்ளதா என்றால் இல்லை என்றால் சரிதான். அசல் வட்டி நான் செலுத்தியதாக இல்லை. மேற்படி வா.சா.ஆ.1 பத்திரத்தில் மேற்குறிப்பில் 1954 என்பது திருத்தப்பட்டு எழுதப்பட்டு உள்ளது என்றால் சரிதான். வீடு மற்றும் காலிமனை பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் யார் பெயரிலும் இல்லை. எங்கள் 3 பேர் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் அது தவறு.

6) நான் குடியிருக்கும் வீட்டிற்கும் பைப்பாஸ்-சிற்கும் சுமார் 4 கி.மீ. தூரம் இருக்கும். என் இடத்திற்கு கிழபுறம் யாருடையது சொத்து என்றால் அதையும் நான் தான் வாங்கியுள்ளேன். ராமநாயுடு, ரங்கசாமி பெயரில் உள்ளது என்றால் சரிதான். அதையும் என்னிடமே விற்றுவிட்டு சென்றுவிட்டு சென்றுவிட்டார்கள். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரச்சனை செய்தாக தாவாவில் சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. அவ்வாறு சொல்லி இந்தால் அது தவறு. நான் சொல்லி தான் எழுதியுள்ளார்கள்.

7) அது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துயுள்ளேன். அந்த புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு சம்பவம் நடந்து இருந்தால் புகார் கொடுத்து இருப்பேன் என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் குடியிருக்கும் 480 சதுர.மீ. வீட்டை தவிர மற்ற பகுதிகள் காலி இடமாக தான் உள்ளது.

8) கிழபுறம் நான் வாங்கியதாக சொல்லும் சொத்திற்கு பத்திரத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் ஒப்படைக்கவில்லை. என் அப்பா சம்பாத்திய சொத்து 2750 சதுரடி என்றும், 480 சதுரடியில் அவர் வீடு உள்ளது, மற்ற இடம் காலியாக உள்ளது அதில் என் சகோதர்களுக்கு பாகம் உள்ளது என்று சொன்னார் சரியல்ல. அடமான கடனுக்குபணம் கொடுத்த உடன் அவர்கள் காலி செய்து சென்று விட்டதால் என் சகோதர்களுக்கு பாகம் இல்லை. பாயிடம் இருந்து நான் சொத்தை வாங்கிவிட்டதால் மற்றவர்களுக்கு பாகம் இல்லை.

9) வழக்கு சொத்தை அபகரிப்பதற்காக மோசடியாக குதவை பத்திரத்தை தயார் செய்து வழக்கு தாக்கல் செய்து வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.04.28 18:20:28 +0530

**Subordinate Judge, Attur.**